# கொடூரத்தில் துவழும் எமது தமிழ் சகோதரருக்கு உதவ விரைவோம். தமிழர்களின் விடிவிற்காக ஒன்றிணைந்து புதிய முறையில் எம்மை நிரைப்படுத்தி எமது போராட்டத்தை தொடர்வோம்!

**பணியாளன் எஸ். ஜே. இம்மானுவேல், ஜேர்மனி**

ஓர் தமிழ் கத்தோலிக்க குருவாகிய நான், சிங்கள பேரினவாத ஒடுக்கு முறையை நேராக அனுபவித்தவனாக, அதன் கொடுமைகள் எமது மக்களை எவ்விதம் தாக்கியது என்பதற்கு சாட்சியமளித்து, கடந்த பல ஆண்டுகளாக தமிழ் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றி வருகிறேன். கடந்த 61 ஆண்டுகளாக நடந்தேறும் இப் போராட்டம், முதற் கட்டத்தில் வன்முறையற்ற ஜனநாயகப் போராட்டமாகவும், இரண்டாம் கட்டத்தில் ஆயுதமேந்திய அரசியல் போராட்டமாகவும் உருவெடுத்திருந்தது. இன்று பல கொரூர நிகழ்வுகளின் ஊடாக, எமது உறவுகள் ஊனமற்றவர்களாகவும் சிறையினராகவும் அடிமைகளாகவும் குரலற்றவர்களாகவும் உதவுவோரின்றி வாழத் துடிக்கின்றனர். அதே நேரத்தில் அண்மைக் கால நிகழ்வுகள் எமது விடுதலைப் போராட்டத்தை ஓர் புதிய மூன்றாம் கட்டத்திற்கும் உருவத்திற்கும் தள்ளி இருக்கிறது.

இம் முக்கிய கட்டத்தில் துன்பியலின் கொடூரத்தில் துவழும் எமது சகோதரருக்கு புலம் பெயர்ந்த தமிழரின் உதவி பற்றியும், எமது மூன்றாம் கட்ட போராட்டத்தைப் பற்றிய கணிப்பையும் கருத்துக்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

### 1. துன்பியல் வடுக்களை சுமக்கும் எமது சகோதரருக்கு உடனடியாக உதவுவது எமது தலையான கடமை.

எமது உதவியின் முக்கியத்துவத்தையும் அவசரத்தின் கனத்தையும் யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. சிங்கள பெரும்பான்மை மக்களை வெற்றிக் களிப்பில் மயக்கி விட்டு தமிழ் இனத்தை அழிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கும் இலங்கையரசுக்கு எதிராக எமது சகோதரர்களிற்கு உதவுவது புலம்பெயர் மக்களாகிய எமது தலையான கடமையாகும்.

1. கடந்த இரண்டு வருடங்களாக 30இ000 தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொலை செய்யப்பட்டனர், 20இ000 காணாமற் போயினா, மூன்று இலட்சத்திற்கு அதிகமான மக்கள் முள்ளுக்கம்பியினுள் சுற்றிவளைக்கப்பட்ட வதை முகாம்களில் வவுனியாவிலும், செட்டிக்குளத்திலும் அற்ப சுதந்திரமின்றி, அடிப்படைதேவைகள் இழந்து தமது அன்பு குழந்தைகளை அல்லது பெற்றோர்களை பிரிந்து காலம் கழிக்கிறார்கள். 9000 மேலான அப்பாவி தமிழ் இளைஞர்கள் புலன்விசாரணையில் சந்தேகத்திலும், சரணடைந்த இளம்போராளிகள் மனிதத்தை இழந்த நிலையில் முகவரியற்ற முகாம்களில் வாடுகிறார்கள். இளைஞர்கள் ஒவ்வொரு நாளும் தெற்கில் உள்ள இரகசிய இடங்களுக்கு சித்திரைவதைக்கு உட்படுத்தப்படவும் விசாரிக்கப்படவும் எடுத்துச் செல்லப்படுகின்றனர். சித்திரைவதையின் பிற்பாடு ஒரு பகுதியினர் மன்னிப்பு வழங்கப்படாமல் காணாமல் போவதுமாக இருக்கிறது. சரணடைந்த போராளிகளையும், புலிகளின் தலமைத்துவத்தின் கீழ் இயங்கிய அலுவலக பணியாளர்களையும் குற்றமற்ற இளைஞரகள் மேலும் போராளிகளாக உருவாக முடியும் என்ற சந்தேகத்தில் அழித்து வருகிறார்கள
2. தெற்கில் சிங்கள மக்கள் மத்தியிலே வாழ்கின்ற தமிழர்கள் அவமானத்திற்கு உள்ளாகின்றனர், பயம் ,கடத்தல்கள், கப்பம் பெறுதல், பயமுறுத்தல்கள் அதிகரிக்கின்றன. வன்னியிலும் வடக்கிலும் தெற்கிலும் வாழும் தமிழர்களுடைய நாளாந்த அனுபவங்களை கேட்கும் பொழுது சிங்கள மக்களின் அரக்கத்தனமும் அனுதாபமற்ற தன்மையும் அதிகரிக்கின்றது என்பது தெளிவாகின்றது. வடக்கில் தாயகத்தில் வாழுகின்றவர்களும் கடுமையான இராணுவ கட்டுப்பாட்டுக்குள்ளும், தமிழ் ஆயுத குழுக்களின் ஆக்கிரமிப்புக்குள்ளும் நசுக்கப்படுகிறார்கள்.

இலங்கையரசு வெட்கமற்ற விதத்தில் ஊடகங்களுக்கும், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கும் கதவுகளை மூடி அதன் பின்னால் பல கொ**டூர** நிகழ்ச்சிகளை நடாத்துகின்றது. ஐக்கியநாடு, பன்நாட்டு செஞ்சிலுவை சங்கங்கள் கூட அத்தியாவசிய சேவைகளுக்காக இம் முகாங்களுக்குள் செல்ல முடியாத நிலை தொடருகின்றது். அத்தியாவசிய தேவைகள் பல மறுக்கப் பட்டும் குறைக்கப்பட்டும் இருக்கும் நிலைமைகளை உலகமறிய வழியில்லை.

### 2. அரசாங்கத்தின் வெட்கத்துக்குரிய அரக்கத்தன மறுப்புகளுக்கும் மறைப்புகளுக்கும் பின்னால் எவ்வித காரணங்கள்?

போர் முடிந்து விட்டது என்று உத்தியோக முறையில் அறிவித்தபின்பும் இற்றவரைக்கும் வன்னிப் பிரதேசத்திலும் அகதி முகாம்களிலும் ஊடகங்களையும் வெளிநாட்டு மனிதபிமான நிறுவனங்களையும்

புக விடாது தடுப்பதன் காரணங்கள் எமது உறவுகளிடமிருந்தும் கொழும்புப் புதினங்களிலுமிருந்து தெளிவாகத் தெரிய வருகின்றது.

1. ஆயுதப் படைகள் அவ்விடங்களில் பல விதமான இரகசியமான கபடமான கொலைகள் தொடர்ந்து நாளாந்தம் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. சரணடைந்த பொராளிகளும் வன்னியில் புலிகளின் கீழ் இயங்கிய காரியாலங்களில் பணி புரிந்தவர்களும் வருங்காலத்தில் அரச பயங்கரவாதத்திற்கெதிராக எளக்கூடிய இளைஐர்களும் இக் கொலைகளுக்கு உள்ளாகின்றனர்.
2. போர்க்குற்ற தடயங்களை மறைப்பதற்கும் தாம் கடைசி நாட்களில் அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராக சர்வதேசத்தினால் கண்டிக்கப் பட்ட கொடூரமான ஆயுதங்களைப் பாவித்த அடயாளங்களை மறைக்க முயலுகின்றனர்.
3. தமிழ் தாயகத்தில் சிங்கள பௌத்த சிலைகளை அமைத்து தமிழ் தாயக ஆதாரங்களை வேரோட்டமாக அழிப்பதற்கும் வருங்கால சிங்கள குடியேற்றத்திற்கான ஆயத்தங்களை செய்வதற்கும் முயற்சிக்கின்றனர்.

இதற்கு முன் உலகில் நடந்தேறிய இன ஒழிப்பு முறைகளையே தற்போதைய இலங்கை அரசும் அமுல் படுத்துகின்றது.

இந் நிலையில் இலங்கையில் சிங்கள புத்தர்கள் தங்கள் தற்போதைய சிந்தனை முறைகளிலோ அல்லது அரசின் அணுகு முறையிலோ மாற்றம் ஏற்படுவதற்கு ஏதாவத நமிக்கை சாத்தியங்கள் உண்டா?

### 3. பாதிக்கப்பட்ட தமிழர்களின் நம்பிக்கையற்ற அவல நிலையும் சிங்களவரின் மவுனமும் செயலாத் தன்மையும் தொடரும் சாத்தியங்கள் பல.

தமிழ்த் தலைமைத்துவத்தின் அளிப்புடன் இலங்கையிலிருக்கும் தமிழர்களின் நிலை முற்றாக மாறியிருக்கின்றது. அடிப்படைத் தேவைகள் மறுக்கப் பட்டு வாழத் துடிக்கும் எமது மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளை எழுந்து நின்று கேட்பதற்கு சக்தியற்றவர்களாக இருக்கின்றனர். நாம் அதை அவர்களிடமிருந்து எதிர் பார்க்க முடியாது.

இலங்கை அரசாங்கம் உள் நாட்டில் இருக்கின்ற சிங்கள சமாதான விரும்பிகளின் கருத்துக்களை மாத்திரமல்ல சர்வ தேச அமைப்புகளின் கருத்துக்களுக்கும் அரக்கத்தனத்துடனும் அவமதிபபுடனும் பதில் கொடுக்க முயலுகின்றது.

அங்கிருந்து எம்மவரிடமிருந்து வரும் நாளாந்த அனுபவங்களை கேட்டறியும் பொழுது சிங்கள மக்கள் தமிழர்களை இரக்கமில்லாது அரக்கத் தனத்துடன் கணிக்கின்றனர் கண்ணோக்ககின்றனர் என்பது தெளிவாகின்றது.

இனப் பிரச்சினைக்கு ஓர் நீதியான சமாதானத் தீர்வு காணலாம் என்ற தமிழருடைய நீண்ட நம்பிக்கை, பெரும் பான்மை சிங்கள மக்களின் அடிப்படையான நன்மைத் தனத்திலும், அவர்கள் மத்தியில் தெளிவும் துணிவுமுள்ள தலைவர்கள் செயற்படுவார்கள் என்பதிலுமே தங்கியிருந்தது. ஆனால் துரதிட்ட வசமாக, அண்மைக் காலங்களில் நிலைமை மோசமடைந்து விட்டது. சிங்கள-புத்த இன வாதக் குழுவின் சொல்வன்மையும் செயற்பாடும் அதிகரித்து பெரும் பகுதியினரின் மௌனத்தையும் செயலற்ற தன்மையையும் தோற்கடித்து விட்டது.

எனது கிறீ□தவ சகோதரர்களும், தொகையில் சிறுபான்மை யாகவும் மேற்கத்திய தோற்றத்தை கொண்டிருந்தாலும், 1948ம் ஆண்டின் சுதந்திரத்திற்கு பின்பு சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் ஒற்றுமை சமாதானம் ஏற்படுத்த தனிப்பெரும் வசதிகளையும் திறமைகளையும் வைத்திருக்கிறார்கள். இத் தீவின் பல்லின பலமதங்கள் வேற்றுமைகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி சமத்துவ அடிப்படையில் ஒரு சிறீ லங்க அடையாளத்தை கூட உருவாக்கும் வாய்ப்புகள் அவர்களுக்கு இருந்து வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் மனிதபிமான பணிகளுக்கும் சில வேண்டுகோமுகளுக்கும் அப்பால் செல்லவில்லை. பவுத்த பெரும்பான்மைக்கு பயந்ததும் அவர்களின் தலைவர்களுக்கு உண்மைக் கிறீ□தவ சீடர்களுக்குரிய துணிவும் இல்லாததுமே காரணங்கள். இந் நிலைப்பாடு இனப்பிரச்சினை மோசமடைவதற்கும் தற்போதைய மனித அவலத்திற்கும் பெருமளவில் துணை போயிருக்கின்றது. (2002 மார்ச்சில் சென்னையில் வெளியிடப்பட்ட எனது ***-இனப் பிரச்சினையும் இலங்கைத் திருச்சபையும்*** - இல் இருந்து)

கடந்த 30 ஆண்டுகளில் கூட, அதாவது புலிகளின் தலைமைத்துவத்தில் அரசியல் பேச்சு வார்த்தையுடன் அரச பயங்கரவாதித்திற்கெதிராக ஆயுதப் போராட்டம் நடத்தியபோது கூட சிங்கள நன்மைத் தனத்தில் இந்த தமிழ் நம்பிக்கை இருந்தது. ஆனால் இன்றைய ராஜபக்ச சகோதரரின் அரசாங்கம், தமிழ் மக்களை நடத்தும் முறையும், சிங்கள சமூக மத தலைவர்களின் மௌனமும், ஊடகங்களிற்கு எதிரான தடைகளும், தமிழர்கள் ஒரு நியாயமான சமாதானத் தீர்வின் மேல் வைத்திருந்த நம்பிக்கையை இளக்கச் செய்து விட்டது.

சுருங்கச்சொல்லின், இலங்கை வாழ் தமிழர்கள் மௌனத்துன்பியலில் துவண்டு கொண்டு எழுந்து நின்று பேச சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சார்பாக பேச சிங்களவர்கள், கிறீ தவர்கள் கூட, துணிந்து முன் வரும் சாத்தியமும் இல்லை. யாரும் கருத்து தெரிவித்தால் நாட்டுப் பற்றற்றவர்கள் என்றும் அல்லது துரோகிகள் என்றும் குற்றம் சாட்டப் படுகின்றனர். ஆகையால் அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களே!

### 4. புலம் பெயர்ந்த தமிழர் எவ்விதம் உதவி செய்ய முடியும்?

முன்னேற்றமான நாடுகளில் வாழும் நாங்கள் எங்களுக்கு இருக்கும் பல வசதிகளைப் பாவித்து

1. இலங்கையரசு நாளுக்கு நாள் எடுக்கும் நகர்வுகளை நாம் விழிப்பாக கவனிக்கவேண்டும. தடுத்து வைத்திருக்கும் முகாம்களுக்குள் இருக்கும் நிலைமைகளை - சித்திரைவதைகள், பசிக்கொடுமை, முள்ளுக்கம்பிக்குள் இறப்புக்கள் - இவைகளை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இத் தீவில் தமிழருடைய வாழ்வு வருங்காலத்தில் எப்படி உருவெடுக்கும் என்பதை தற்போது மூடிய கதவுகளிற்கு பின்னால் இன்றைய அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தங்கி இருக்கிறது. மீளக் குடியமர்த்தல், கன்னிவெடி அகற்றுதல், பயங்கரவாதிகளைக் களைதல் போன்ற போர்வைகளின் கீழ் பல கொடூர நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஊடகத் தடையுடன் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் அமுக்கியிருக்கும் நிலையில் இக் கொடுமைகளை உலகிற்கு எடுத்துக் கூறுவது எமது புனித கடமையாகும்.

2. பல மூலங்களிலிருந்து எமக்கு கிடைக்கும் அறிவித்தல்களை அந்தந்த அரசுகளுக்கும் அரசுசார்பற்ற நிறுவனங்களுக்கும் அனுப்பி வையுங்கள். இவ்வாறான அறிவித்தல்களே இலங்கையரசுக்கு அழுத்தங்களை கொடுக்கும். அத்தோடு இலங்கையரசினால் நடாத்தி முடிக்கப்பட்ட போர்குற்றங்களை ஆவணம் செய்ய உதவும்.

3. சர்வதேச செஞ்சிலுவை அல்லது கறிற்றா போன்ற நிறுவனங்கள் ஊடாக எம்முடைய பொருளுதவிகளை அனுப்புவோம். இலங்கைக்குள் தென்பகுதியில் இயங்கும் நிறுவனங்களின் மனிதபிமான வேண்டுகோள்களையிட்டு கவனமாயிருப்போம். வன்னியில் கொடுமைகள் நடந்த பொழுது மௌனமாயிருந்தவர்கள் இப்போ சுய நலத்திற்காக செயல் படக் கூடும்.

4. எம்மவர் படும் இத்துன்பியலோடு இலங்கை அரசு தமிழர்களுடைய விடுதலையை கொச்சப்படுத்தி போலித்தலைவர்களை உருவாக்கி குழப்பத்தையும் பயத்தையும் உருவாக்குகிறார்கள். இவர்கள் பணத்தையும் பதவியையும் அரசாங்கத்திடம் பெற்று அவர்களுடைய இனஅழிப்புத்திட்டத்திற்கு கைகோர்த்து நிற்கிறார்கள். மேலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழத்தேசிய கூட்டுறுப்பினர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள்.

இம் முயற்சிகள் விரைவாக்கப்பட வேண்டும். எதிர் காலத்திற்கான அமைப்புக்கள் கட்டுமானங்கள் உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இவைகளை தாமதிக்க முடியாது. தவிக்கும் உயிர்களை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு நாளும், ஏன் ஒவ்வொரு மணித்தியாலமும் பெறுமதியானது.

(பகுதி 2 தொடரும்)